பொதுப் பணித் துறையிலுள்ள ஸ்பெஷல் மேஸ்திரிகள்

*488. **வினா—திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பொதுப்பணித் துறையில் பணியாற்றும் ஸ்பெஷல் மேஸ்திரிகள் சுமார் 5,000 பேர்கள் வேலை நிதியிலிருந்து work charged ஊதியம் பெற்றவர்களாக இருந்தவர்களை அரசு ஊழியர்களாக 24—11—1970 முதல் ஆக்கியும், இவர்களுக்கு இரண்டாவது ஊதியக் குழு சிபாரிசு எதும் செய்ய வில்லை என்பது அரசுக்குத் தெரியுமா?

(இ) ஆம் எனில், இது குறித்து அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) & (இ) வேலை நிதியிலிருந்து ஊதியம் பெற்று அரசு ஊழியர்களாக 24—11—1970 முதல் ஆக்கப் பட்டவர்களுக்கு இரண்டாவது தமிழ்நாடு ஊதியக் குழுவின் சிபார்சுபடி கீழ்க் கண்ட அரசாணைகளில் ஊதியமாற்றம் அளிக்கப்பட்டுள்ளது.

1. அரசாணை எண் 222, நிதித் துறை, தேதி 8—2—1971.
2. அரசாணை எண் 651, நிதித் துறை, தேதி 4—5—1971.
3. அரசாணை எண் 873, நிதித் துறை, தேதி 16—6—1971.

மேற்கண்ட ஆணைகளில் சேர்க்கப்படாத வேறு சில பதவிகளைக் குறித்து ஊதிய மாற்றம் செய்யும் கோரிக்கை அரசின் பரிசீலனையிலுள்ளது.

பாலாற்றிலிருந்து நீர் பெறும் ஏரிகள்

* 489. **வினா—திரு. தோப்பூர் திருவேங்கடம் :** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

வட ஆற்காடு மாவட்டத்தில் எத்தனை ஏரிகளுக்கு மழை காலத்தில் பாலாற்றிலிருந்து நீர் வருகின்றது?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : வட ஆற்காடு மாவட்டத்தில் 289 ஏரிகளுக்கு மழை காலத்தில் பாலாற்றிலிருந்து தண்ணீர் வருகிறது.

திரு. தொ. ப. சீனிவாசன் : வட ஆற்காடு மாவட்டத்தில் பாலாற்று நீர்ப் பாசனம் சம்பந்தமாக அமைச்சர் அவர்கள் பதில் சொன்னார்கள். வட ஆற்காடு மாவட்டத்தில் செய்யாற்றுக்கு வருகிற தண்ணீரை எல்லா ஏரிகளுக்கும் பயன் படுத்துவதற்குரிய சிறப்பு நடவடிக்கைகளை அரசாங்கம் எடுக்குமா?